பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை
தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005.
துணை ஆணையர் (சட்டம்),
முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5.
முன்னிலை: திருமதி அ. வள்ளி

**செ.மு.ஆ.எண். T–01/5/2023 V AND A –II CCT–CTD நாள் 18.01.2023**

<u>பொருள்:</u> தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 – இவ்வலுவலக அலுவல் முறைச்சாரா கடித எண். IW6/3389688/2022, நாள் 28.10.2022–ன் நகல் வேண்டி பெறப்பட்ட மனு – தொடர்பாக

<u>பார்வை:</u> திரு D. விஜயகுமார், Advocate, எண். 312, சட்ட அறை (New Addl. Law Chamber) உயர்நீதிமன்ற வளாகம், சென்னை – 600 104 அவர்களின் 11.01.2023 நாளிட்ட விண்ணப்பம். (இவ்வலுவலகத்தில் 12.01.2023 அன்று பெறப்பட்டது)

––––––

*மேல்முறையீடு: இந்த ஆணையின் மீது மேல்முறையீடு செய்ய வேண்டியிருப்பின், இவ்வாணை பெறப்பட்ட 30 நாட்களுக்குள் திரு. அ.பா. தேவேந்திர பூபதி, மேல்முறையீட்டு அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, கூடுதல் ஆணையர் (Non–GST), முதன்மைச் செயலர் / வணிக வரி ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை–5 (தொலைபேசி எண். 044–28546944, 28514656) அவர்களிடம் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.*

**<u>ஆணை:</u>**

பார்வையில் காணும் தங்களின் 11.01.2023 நாளிட்ட விண்ணப்பத்திற்கு கீழ்காணும் விவரம் தெரிவிக்கப்படுகிறது.

10.10.2022 நாளிட்ட தங்களின் விண்ணப்பத்திற்கு <u>03.11.2022 அன்று அளிக்கப்பட்ட தகவலின் தொடர்ச்சியாக</u>, தற்பொழுது இவ்வலுவலக அலுவல் முறைச்சாரா கடித எண். IW6/3389688/2022, நாள் 28.10.2022 – ன் நகல் அளிக்குமாறு குறிப்பிட்டு அளித்துள்ள விண்ணப்பம், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)–ன் கீழ் பெறப்படும் புதிய விண்ணப்பமாகவே கருதப்படும் என்பதாலும், விண்ணப்பத்துடன் உரிய விண்ணப்ப கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் இணைத்து அளிக்கவில்லை என்பதாலும், இவ்விண்ணப்பம் ஏற்க இயலாத நிலை உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தாங்கள் விரும்பும் நேர்வில், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)–ல் குறித்துரைக்கப்பட்டவாறு, உரிய விண்ணப்ப கட்டணத்துடன், புதிய விண்ணப்பம் ஒன்றினை, உரிய வழிவகையில் பொதுத் தகவல் அலுவலருக்கு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

19/01/2023

பொதுத் தகவல் அலுவலர்
தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
துணை ஆணையர் (சட்டம்) .

பெறுநர்
திரு D. விஜயகுமார், Advocate,
எண். 312, சட்ட அறை (New Addl. Law Chamber)
உயர்நீதிமன்ற வளாகம்,
சென்னை – 600 104 (பதிவு அஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்)

நகல் கோப்பு / இருப்புக் கோப்பு